
# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி 1969



மார்ச் - 1999

12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### ★ ஒரு குற்றச்சாட்டு

தொண்டனில் ஒரு சிலரே அடிக்கடி எழுதுவதாகக் குற்றச்சாட்டு உண்டு. மற்றவர்களுக்கும் இடமளித்தால் என்ன? மாறுபட்ட எழுத்துக்கள், கருத்துக்கள் தொண்டனை மேலும் சுவைப்படுத்தும் அல்லவா?

அஞ்சலா செபஸ்தியான்
மட்டக்களப்பு.

யார் வேண்டாமென்றார்கள். தொண்டன் எவருக்கும் கதவடைப்புச் செய்வதில்லை தரமான எழுத்துக்களுக்காக தாகத்தோடு காத்திருக்கிறோம். - இ. ஆ.

### ★ தாமதம் வேண்டாம்

தொண்டன் அடிக்கடி தாமதமாக வருகிறது. ஒரு சஞ்சிகையை உரிய காலத்தில் வெளியிடுவதே சிறப்பு. ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் கையில் கிடைக்கும்படி செய்யுங்கள்.

கிறிஸ்ரி இதயராஜ்
திருகோணமலை.

உங்கள் கருத்தில் எமக்கும் உடன்பாடு உண்டு முயற்சிக்கிறோம் - இ. ஆ.

### ★ புதிதாக...?

தொண்டன் புதிய ஆண்டில் புதிய அம்சங்களுக்கு இடம்கொடுத்து, புதுமையாக வெளிவர வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்

மேரி ஜுலியானா
மட்டக்களப்பு.

### ★ பயணித்தோம்

'புனித நாட்டுப் பயணம்' தொடர் கட்டுரை மிகவும் சுவையாக இருக்கிறது. புனித நாட்டை நாமே நேரில் பார்த்தது போன்ற உணர்வை கட்டுரையாளர் ஏற்படுத்திவிட்டார். பாராட்டுக்கள்.

செல்வி டிலானி குரூஸ்
மட்டக்களப்பு.

### ★ சிறுகதை இல்லையே!

சிறுகதைகள் முன்புபோல் தொண்டனில் அதிகம் இடம்பெறுவதில்லையே! காரணம் என்ன? ஒவ்வொரு இதழிலும் குறைந்தது ஒரு சிறுகதையையாவது சேர்த்துக்கொள்ளுங்கள். ஒரு சஞ்சிகையை படிக்கத்தூண்டுவதில் சிறுகதைகளும் முக்கியமானவை.

S. மரியசீலன்
திருகோணமலை.

### ★ வாழ்த்து

முக்காடு அணிவதா முக்கியம் என்ற கேள்வி அடையாளத்துடன் C. J. ஜெய்ருக்ஷி எழுதிய கட்டுரையில் தனது கருத்துக்களையும் விளக்கங்களையும் மிகவும் ஆழமாகவும் அகலமாகவும் எடுத்தியம்பியிருந்தார். அவருக்கு எமது வாழ்த்து.

L. J. L. பரீனா
வங்களை.

# தொண்டன்

மார்ச் - 1999


மலர் 31 இதழ் 02



ஆசிரியர் :
A. தேவதாசன்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள் :
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி :
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723



விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)




உள்ளே.........


| | | | |
|---|---|---|---|
| 1. | இதயந்திறந்து | ... | 02 |
| 2. | கன்மலையாகிய | ... | 03 |
| 3. | இந்தியாவில் | ... | 05 |
| 4. | பாராட்டுகிறோம் | ... | 07 |
| 5. | கற்பாறையும் | ... | 08 |
| 6. | மரணத்தீர்ப்பு | ... | 09 |
| 7. | நிஜங்களின் தரிசனம் | ... | 10 |
| 8. | ஹினிதுப | ... | 13 |
| 9. | இன்டர்நெட்டில் | ... | 14 |
| 10. | ம(ணி)தம் | ... | 17 |
| 11. | விமர்சனத்துக்கு மறுப்பு | ... | 20 |
| 12. | புனித நாட்டுப்பயணம் | ... | 22 |
| 13. | விவிலிய - பொது அறிவு | ... | 23 |
| 14. | போட்டி முடிவுகள் | ... | 24 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந் திறந்து ..................

ஆண்டவரிடம் திரும்பி வா.....

அப்பா ஆண்டின் விருது வாக்கிது. இறைவனால் அன்பு செய்யப்பட்டு, அவரால் தெரிந்து எடுக்கப்பட்டு ''நான் உங்கள் தேவன், நீங்கள் என் மக்கள்,'' அன்பு உறவுக்குள் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் உறவை உதறித்தள்ளி விட்டு, ஊதாரித் தனமாக, பிரமாணிக்கமற்ற மக்களாக அலைந்தனர். அவர்களைப் பார்த்து ஆண்டவர் அழைத்தார், ''திரும்பி வா'' என்று. யோவேல்: 2/13

''இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்.''

திருமுழுக்கின் வழியாக உன்னையையும் அன்பு செய்தார். தெரிந்தெடுத்தார். நான் உன் தந்தை நீ என் பிள்ளை என்றார். பிழை நடந்து விட்டது. பிள்ளை பெலவீனத்தால் பிரமாணிக்கம் தவறியது.


''நீ'' தான் அந்தப் பிள்ளை. ஆண்டவரை விட்டு அலைந்து திரிகிறாய். அவரது வார்த்தைகள் உன் காதில் விழுவதுமில்லை அவற்றை நீ வாழ்வதுமில்லை, வார்த்தை இல்லாத ஒரு வாழ்வு வாழ்கிறாய் வார்த்தையால் மீட்கப்பட்ட நீ வார்த்தைக்குள் வா! என் ஆண்டவர் அழைக்கிறார். உன் வரவு வார்த்தையைக் கடைப்பிடித்து வாழும் வாழ்வாக அமையட்டும்.

★ ஆசிரியர்

---

உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்!

யோவேல் 2/12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்மலையாகிய இயேசு

★ ஸ்ரெலா பாரதி

"நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும் நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப் பாருங்கள்" (இசை 51:1)

கன்மலையாகிய யேசுவை நோக்கிப் பாருங்கள். நாம் அவரில் இருந்துதானே வந்தோம்? நாம் அவரில் இருந்துதானே வெட்டி எடுக்கப்பட்டோம்?

அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்று 1 கொரி 10:4 கூறுவதை நாம் காணலாம். இஸ்ரவேல் ஜனங்களோடு ஞானக் கன்மலையாய் இருந்தவரும் அவரே. வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தண்ணீர் கொடுக்க கன்மலையாய் பின் தொடர்ந்தவரும் இயேசுக் கிறிஸ்துவே! அவரை நோக்கிப்பாருங்கள். நாம் அனைவரும் அவரில் இருந்துதான் வெட்டி எடுக்கப்பட்டு இருக்கிறோம். அவரில் இருந்துதான் தோண்டி எடுக்கப்பட்டு வேறு பிரிக்கப்பட்டு இருக்கிறோம்.

நாம் பாவத்திற்கு அடிமையாகிப் பாவிகளாய் இருந்தபோதும் கிறிஸ்துவின் அன்புக்கு அந்நியராக இருந்தபோதும் அந்தக் கன்மலையானவர் நம்மேல் கிருபையுள்ளவராக இருந்தார். நம்மைத் தேடித்தேடி நடந்துவந்தார். நம்மை மீட்டு இரட்சிப்பதற்காக அந்தக் கன்மலையான கிறிஸ்து தன்னை சிலுவையிலே அர்ப்பணித்தாரே!

நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட அந்தக் கன்மலையை நோக்கிப்பாருங்கள். அருள் 19:34 சொல்கிறது, ஒரு போர்ச்சேவகன் இயேசுக்கிறிஸ்துவை ஈட்டியினாலே விலாவிலே குத்தினான். அப்போது இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வந்தது. பிளக்கப்பட்ட அவருடைய விலாவில் இருந்து நாம்



வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறோம். பீறிட்டு வந்த அவருடைய செந்நிறக் குருதியில் இருந்து நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளோம். அதனால் நாம் அனைவரும் கன்மலையான கிறிஸ்துவின் ஒருபகுதி என்பதை மறந்துவிடக்கூடாது.

அவர் முள்முடி சூட்டப்பட்டபோது அந்தக்கொடிய முட்கள் அந்தக் கன்மலையிலே குத்திக் குழிகளை உண்டாக்கிவிட்டது. முரட்டுப் போர்ச்சேவகன் அவரை வாரினால் அடித்தபோது அந்தக் கசையடிகள் அவருடைய சதையையும், நரம்பையும் கிழித்துக் கொண்டு வந்தது. அவர் வெட்டப்பட்டு கிழிக்கப்பட்டார். நமக்காகக் கன்மலையாய் மாறினார். தோண்டிவிடப்பட்ட துரவைப் போல் (மடுக்கள்) அவருடைய சரீரமெல்லாம் இரத்த ஊற்றுக்களால் நிரம்பியிருந்தன!

பெரிய கன்மலை வெட்டப்பட்டு சிறிய சிறிய துண்டுகளாவதுபோல இயேசுவினுடைய சரீரம் கிழிக்கப்பட்டு மாம்சமெல்லாம் சிதைந்தது. அதற்கொப்ப இயேசு அப்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து அதைப்பிட்டு இதைவாங்கிப் புசியுங்கள். இது எங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாக இருக்கிறது என்று சொன்னார். அவருடைய இச்சரீரத்துண்டங்களை உட்கொள்கிற நாம் சிறுசிறு கன்மலைத்துண்டுகளாக இருக்கின்றோம்.

கிறிஸ்துவில் இருந்து வெட்டப்பட்டு உருவாக்கப்பட்டு கிறிஸ்துவர்களான நாம் கிறிஸ்துவின் சுபாவங்களை தரித்துக்கொண்டுள்ளோமா? கன்மலையாகிய கிறிஸ்துவின் குணாதிசயங்கள் காணப்படுகின்றனவா? நாம் அவரைப்போல் மாறவேண்டும் அல்லவா?

நாம் எவ்வளவுக்கு எவ்வளவு கல்வாரிச் சிலுவைக்கு முன்பாக நின்று அவருடைய இரத்தத்தினால் கழுவப்படுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் பரிசுத்த ஆவியாகிய அபிசேகத்தினால் நிரப்பப்படுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் இயேசுவைப் போல மாற்றப்படுவோம்.

''நீ அங்கே கன்மலையில் நில். என் மகிமை கடந்து போகும்போது, நான் உன்னை அந்தக்கன்மலையில் வெடிப்பில் வைத்து, நான் கடந்து போகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்'' (யாத் 33:21, 22)

# வாழ்த்துகிறோம்



தூய மறை ஆயராம்
யோசப் கிங்ஸ்லி
சூசைமகான் பெயர்தன்னை
தன்னில் வைத்தோன்
நேயமுடன் பெயர்கொண்ட
நாளில் நாங்கள்
நெஞ்சார வாழ்த்துகிறோம்
வாழ்க! வாழ்க!!

(1999 மார்ச் 19 நமது ஆயர் பேரருள் திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் பெயர்கொண்ட திருநாள்)

## வியாபாரமாகும் விளையாட்டு இலங்கை கிரிக்கட் வீரர்களின் சம்பளம்

| | மாதச்சம்பளம் ரூபாவில் |
|---|---|
| அர்ஜுனா ரணதுங்க | 3,85,000 |
| அரவிந்த த சில்வா | 3,85,000 |
| சனத்ஜெயசூரியா | 2,20,000 |
| ரொஷான் மகாநாம | 2,20,000 |
| ஹஷான் திலகரட்ண | 2,20,000 |
| முத்தையா முரளிதரன் | 1,65,000 |
| சமிந்தவாஸ் | 1,65,000 |
| குமார் தர்மசேன | 60,500 |
| ரொமேஸ் களுவிதாரண | 66,000 |
| மாவன் அத்தபத்து | 55,000 |
| ரவிந்திர புஷ்பகுமார | 49,500 |
| சன்ஜீவ சானக | 35,000 |
| உபுல் சந்தன | 37,750 |
| ருவன் கல்பகே | 27,500 |
| ரசல் ஆனோல்ட் | 22,000 |
| மஹேல ஜெயவர்தன | 22,000 |

(நன்றி 'ராவய')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள்

உலகுக்கு அரிய ஆன்மீகச் செல்வங்களையும் வேதாந்த சித்தாந்த தத்துவங்களையும் வழங்கிய நாடு இந்தியா.

உலகின் பெருமதங்களாக விளங்கும் இந்து, பௌத்த மதங்கள் தோன்றிய நாடும் இந்தியாவே தான்.

சர்வமத சமரச நோக்கைப் பரப்பிய இராமகிருஷ்ணரும், அஹிம்சாமூர்த்தியான மகாத்மாகாந்தியும் அவதரித்த நாடு இந்தியா.

இத்தகைய புகழ்பூத்த நாட்டில் மத, வகுப்புவாதக் கலவரங்களுக்குக் குறைவே இல்லை.

உலகில் மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட இரண்டாவது பெரிய நாடான இந்தியாவில் பல மொழிகளைப் பேசுவோரும் பல மதங்களைப் பின்பற்றுவோரும் உள்ளனர்.

மதச் சார்பின்மை இந்திய அரசியல் சட்டத்திலேயே வரையப்பட்டுள்ளது. ஆனாலும் பெரும்பான்மையாக இந்துக்களைக் கொண்ட இந்தியாவில் சிறுபான்மை மதங்கள் எப்போதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றன.

நீண்டகாலமாகவே இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்கள் இந்துத் தீவிரவாதிகளால் பல்வேறு நெருக்கடிக்குள்ளாகி வருவதைக் காணலாம்.

இதுவரையில் இஸ்லாமியருக்கு எதிராகவே பெருந்தாக்குதல்களையும், அழிப்புகளையும் தீவிரவாதிகள் புரிந்துவந்துள்ளனர். அதன் உச்சக்கட்டமாக நிகழ்ந்த பாபர் மசூதி அழிப்பு இந்திய நாட்டின் முகத்தில் கரி பூசியது.

**மதச் சார்பின்மை இந்திய அரசியல் சட்டத்திலேயே வரையப்பட்டுள்ளது ஆனாலும் பெரும்பான்மையாக இந்துக்களைக் கொண்ட இந்தியாவில் சிறுபான்மை மதங்கள் எப்போதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றன.**

**அண்மைக் காலமாக இந்துத் தீவிரவாதிகள் கிறிஸ்தவ சமூகத்துக்கு எதிராகவும் தமது கைகளைத் தூக்கியுள்ளனர்.**

சில ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் குமரி மாவட்டக் கடற்கரையோரக் கிராமங்களில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்கள் இந்து வெறியர்களால் பயங்கரமாக சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டனர். கோவில்கள், வீடுகள், பாடசாலைகள், அவர்களது தொழிலுக்கு மூலாதாரமான வலைகள், படகுகள் யாவும் எரியூட்டி அழிக்கப்பட்டன.

இப்போது வடஇந்தியக் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் இந்துத் தீவிரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்தியாவில் நவீன கல்வி வளர்ச்சிக்கும், மற்றும் மருத்துவ, சமூக அபிவிருத்திக்கும் அரிய பங்காற்றிவரும் கிறிஸ்தவ மிஷனறிகளைக் கொலைசெய்தும், அருட்கன்னியர்களைக் கொடூரமாகக்கற்பழித்தும் கிறிஸ்தவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களையும் சொத்துக்களையும் எரியூட்டி அழித்தும் இந்துத் தீவிரவாதம் கோரத் தாண்டவமாடி வருகிறது.

**பாமர மக்களை கிறிஸ்தவர்கள் ஏமாற்றி மதம் மாற்றுகிறார்கள் என்பது இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி நீண்ட காலமாகக் கூறப்பட்டு வரும் உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டாகும்.**

மதவாதம் பேசி ஆட்சிக்குவந்த பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டரசாங்கத்தின் ஆட்சியில் இந்துத் தீவிரவாதம் அதிகரித்திருப்பது கவனிக்கத்தக்கது. பா. ஜ. க. அரசுக்குச் சார்பான தீவிரவாதக் குழுக்களே இந்த வெறியாட்டத்தில் சம்மந்தப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மதவாதம் பேசி, மக்களுக்கு உணர்ச்சியூட்டி பதவிக் கதிரைகளைப் பிடித்த பா. ஜ. அரசு இன்று விதைத்ததை அறுவடை செய்கிறது. ஆனால் அப்பாவிக் கிறிஸ்தவ மக்கள் கொல்லப்படுவது எந்தவகையில் நியாயம்?

பாமர மக்களை கிறிஸ்தவர்கள் ஏமாற்றி மதம் மாற்றுகிறார்கள் என்பது இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி நீண்டகாலமாகக் கூறப்பட்டுவரும் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டாகும்.

அனைத்து மக்களையும் ஒரே கடவுளின் பிள்ளைகளாக ஏற்று, அனைவருக்காகவும் இயேசுக் கிறிஸ்து பாடுபட்டார், மீட்டார் என்ற மாபெரும் உண்மையை மனதில் கொண்டு அனைவருக்கும் மதவேறுபாடு, இன வேறுபாடின்றி அன்புப் பணியாற்றுகின்றது கிறிஸ்தவம். வெறுமனே கடவுளையும், மோட்சத்தையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்காது மக்களின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்காகவும் தனது வளங்களை எல்லாம் வழங்கி மக்களின் வாழ்வு உயர தன்னை அர்ப்பணிக்கின்றது. இதனால் பயனடைந்து, கவரப்பட்ட சிலர் தங்களை கிறிஸ்தவத்தோடு இணைத்துக்கொள்வது இயல்பானது. இது அவரவரது மனச்சுதந்திரம் - மதச்சுதந்திரம். இதைக்கண்டு பொறுக்கமுடியாத சிலர் மதம் மாற்றுகிறார்கள் என்று பூச்சாண்டி காட்டுவது இயலாமையின் விளைவே அன்றி வேறல்ல. இதை மறைக்க ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு அட்டகாசம் புரிவது அநாகரிகமானது மட்டுமல்ல பலத்த கண்டனத்துக்குரியதுமாகும்.

**கிறிஸ்தவம் அனைத்து மதங்களையும் மதிக்கிறது. அவைகளில் உள்ள உயர்ந்த ஆன்மீகச் செல்வங்களைப் போற்றுகிறது. ஒரே இறைவனை நோக்கிச் செல்லும் இறைமக்கள் அனைவருடனும் கைகோர்த்து பயணப் படவே கிறிஸ்தவம் விரும்புகிறது.**

வரலாறு மூன்றாம் சகாப்தத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்ற வேளையிலும் மனிதர்கள் தாம் உருவாக்கிக்கொண்ட மதங்களின் பெயரால் மதங்கொண்டு திரிவது பரிதாபமானது.

கிறிஸ்தவம் அனைத்து மதங்களையும் மதிக்கிறது. அவைகளில் உள்ள உயர்ந்த ஆன்மீகச் செல்வங்களைப் போற்றுகிறது. ஒரே இறைவனை நோக்கிச் செல்லும் இறைமக்கள் அனைவருடனும் கைகோர்த்துப் பயணப்படவே கிறிஸ்தவம் விரும்புகிறது.

மதசார்பின்மையை தனது அரசியல் சட்டத்தில்கொண்டுள்ள இந்திய அரசு அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களையும் வேறுபாடின்றி நடத்துவதன் மூலமும், பாதிப்புக்குள்ளாகும் சிறுபான்மைச் சமூகங்களை பாதுகாப்பதன் மூலமும் தனது ஆட்சியின் நேர்மையையும், அரசியல் சட்டத்துக்குக் கொடுக்கும் மரியாதையையும் வெளிப்படுத்த வேண்டும் என்று உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

★ மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டுகிறோம்!

# வாழ்த்துகிறோம்!

பிரான்சிலுள்ள தமிழ் ஒலி நிறுவனம் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய சில்லையூர் செல்வராசன் நினைவு வானொலி நாடகப் போட்டியில் திருகோணமலை பெரியகடை பேராலயப் பங்கைச் சேர்ந்த திரு. தாபி. சுப்ரமணியம் (மணியம் மாஸ்டர்) அவர்கள் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற விழாவில் வெகுஜன தொடர்புசாதன, தபால் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பா அவர்கள் முதல் பரிசான ஐம்பதாயிரம் ரூபாவை தாபி. சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கினார். இலக்கிய ரீதியில் இலங்கையில் கிடைத்த அதிகூடிய பரிசுத் தொகை இது என்று கருதப்படுகிறது.

திரு. தாபி. சுப்பிரமணியம் அவர்கள் திருமலை மாவட்டத்தின் நாடகத்துறை முன்னோடிகளில் ஒருவர். எழுத்தாளர், கலைஞர். திருமலை மாவட்டத்தின் நாடகத்துறை வரலாற்றில் தமது பெயரை ஆழமாகவே பொறித்துக்கொண்டவர்.

நம்மவர் ஒருவருக்குக் கிடைத்த இந்தப் பெரும் பரிசை கௌரவத்தை எண்ணி நாமும் மகிழ்கிறோம். மனமுவந்து பாராட்டுகிறோம். அவரது கலை இலக்கியப் பணிகள் தொடர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பாறையும் கலங்கியது

★ அ. ச. பாய்வா




வட்டமிட்டுக் கழுகுகள்
வானத்தைச் சுற்றிவந்து
கட்டியங்கள் கூற
வசந்தத்தையழைத்து
முத்தமிட்ட பூமி
கசந்து கார்துகிலால்
ககனத்தை மூடியது.

இந்தப் பூமியின்
நிர்வாணத்தைப் போக்கஉன்
மகாவஸ்திரங்களை இழந்தபோது
தபோர்மலை மேகங்கூட
கருந்துகில் போர்த்திக்
கண்ணீர் சிந்தியது.

மண்ணின்
பிணக்குகளும் வியாச்சியங்களும்
தீர்ந்துவிடும் நேரம்,
ஈனஸ்வரத்தில் மனிதம் தன்
இறுதிமூச்சை வாங்கிக்கொண்டது.

கற்பாறைகூடக்
கலங்கியதே உன்
ஆன்மதாகக் குரல்கேட்டு

என்விமுக்திக்காய்
மூன்றாணித் தவ்வலில்
வானத்தையும் பூமியையும் ஸ்பரிசிக்காது
அந்தரத்தில்
நெக்குவிட்டுப்போனஉன் உடலம்
யாசிப்பது தானென்ன?

**- மரணம் -**

மரணமே வாழ்வின் ஸ்திதி
நுகட்பொழுதின் மிக
நுண்ணிய பின்னத்தில்
நிகழ்மாற்றம்

உன்
உடல்தீ
உயிர் அணைய
உலகம் உயிர்பெற்றது

உன்
மானுடப் பிரவேசமோர்
பிறழ்வை உபாசித்த
பூமியின் மையப்புயல்

உன் மரணமோ
இனி எழுதும் ஓர்விதி
அது என்
விடிவின் வரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தீர்ப்பு

ஐயருக்கு மரணத்தீர்ப்பு! அவரிளைத்த குற்றமோ ஒன்றுமில்லை.
பொய்யராம் புல்லர்கூட்டம் கொல்லும்! கொல்லும்! என்று
கொக்கரித்தார் என்பதற்காய், கொடுமை, கொடுமை
கொலை மரஞ்சுமந்தார்,
ஊன்கிழிந்து உடல்பிளந்து உதிரம்பாய
உயிர்துடிக்க அடிபொறுத்தார்
முள்ளின் முடிதாங்கி மாமலையின் முடிநோக்கி
முன்னேறும் தேவமகன் மும்முறையாய் வீழ்ந்தெழுந்தார்
ஏனிந்த வேதனையோ!
மனுக்குலம் தன்மதியிழந்து மாபெரிய பாதகத்தில்
வீழ்ந்தழிந்தார் என்பதற்காய்
மனுமகனார் சிலுவையிலே மாய்வதென்ன நீதியாமோ?
தானென்பதில்லாமல் தந்தையவர் சித்தமதைத்
தலைமேற்கொண்டு
தாரணியிற் தேவமகன் கொல்மரத்திற் கொலையுண்டார்
குற்றமெது மில்லாராக,
முத்தமிட்ட யூதாசும் மும்முறையாய் மறுதலித்த பேதுருவும்
குற்றமெதுமிலனென்று கையலம்பிக் கவலைதீர்த்த
பிலாத்துவுந்தான் இக்கொலைக்கு உடந்தைசொல்லோ!
இல்லை ''இல்லை''
எத்தரும் பித்தரும் இழிஞரும் சுத்தமில்லாச்
சுயங்கொண்ட சண்டாளரெம் வினைதீர்க்க
அத்தன் பலியாயினர், அது பிதாவின் சித்தம்
இத்தனை நிகழ்ந்தும் இளகா நெஞ்சங்களே!
இன்றெத்தனை! எத்தனை!! இழிசெயல் இப்பூமியிலே,
இறைவன் படைப்பெங்கே? இயற்கை நியதியெங்கே?
ஆணென்றும் பெண்ணென்றும் ஆண்டவன் படைத்தானே அர்த்தமென்ன?
காமம், கள், கொலை, களவு, சூது, வெறி,
உள்ளொன்று, புறமொன்று உயர்வு தாழ்வு
சத்தியத்தைக் குழிபறித்துப் புதைத்தாயே!
சமாதானம் எப்படிவரும்?
சண்டாள உலகமே! சற்றுத் தரித்துநில்,
சாபத்தைத் தலைமேற் சுமந்தழிந்து
போவதுதான் சாதனையோ! இல்லை இல்லை!
சகமுழுதும் சருவேசுரன் முன்னிலையில்
மண்டியிட்டு மனம்மாறட்டும்,
சகலவித கொடுமைகளும் ஈங்கிருந்து
அகன்றோடட்டும்
சாந்தி, சமாதானம் தழைக்கட்டும்.

★ கே. ஜே. வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களின் தரிசனம்

★ கே. கிறிஸ்டி முருகுப்பிள்ளை

''ஐயோ ... அம்மா''

ஒரு கெட்ட கனவு கண்டு திடுக்குற்று விழித்தாள்...

அவள் எப்போது விழிப்பாள் என்பதை எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல் மணிக்கூடு ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது...

அவளுக்கு தலை விண் விண் என்று வலித்தது.

இன்னும் கொஞ்சநேரம் கட்டிலில் சாய்ந்திருந்தால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும் என நினைத்தவள்...மறுகணம் அந்தக் கண நேர இன்பம் அன்றையப் பொழுதில் எத்தனை துன்பங்களைத் தேடித்தரும் என உணர்ந்து கொண்டவளாய் ''ஹம்மா'' என்று சோம்பல் முறித்த வண்ணம் திருப்பிப் பார்த்தாள். வாயைத் திறந்து குறட்டை விட்ட வண்ணம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த தன் கணவனை ஒரு தடவை பார்த்தவள் வெறுப்புடன் 'ஹூம்ம்' என்று உதட்டைப்பிதுக்கிக்கொண்டாள்...

அவளின் கணவன்...

சுயநலனின் மறுவடிவம்...

இரு பிள்ளைகளின் தந்தையாகி நாற்பத்தைந்தைக் கடந்தபோதிலும் கிறிக்கற் என்ற சிறுபிள்ளைத் தனமான ஆர்வங்கள்...

தனக்கென்றொரு மனைவி.. பிள்ளைகள் இருப்பது கிஞ்சித்தும் நினைவில்லாத பிரகிருதி.

ம்ம்.. என்ன செய்வது ''புல்லானாலும் புருஷன்'' என்ற வக்கற்றமுதுமொழியை எண்ணிச் சலித்துக் கொண்டாள்...

காலையில் எழுந்து... குளித்து.. காலையுணவு... பகலுணவு என்பவற்றை இயந்திரமாகவே மாறிவிட்ட உணர்வில் பூர்த்தியாக்கி தன் இரு பிள்ளைகளையும் வழக்கம் போலவே மிகவும் சிரமப்பட்டு எழுப்பிய பின் கணவனைத் தேடியபோது அவன் 'டிஸ்கவறியில்' மூழ்கியிருந்தான். அவனைத் திருத்தவே முடியாது என்ற மரத்துப்போன உணர்வுடன் பவ்வியமாக பக்கத்தில் தேநீரை வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தாள்.. 'திக்' என்றிருந்தது.. ஏழேகால்..

ஒப்பனை என்ற பேரில் ஏதோ தலையை வாரி அடக்கமான கொண்டையொன்றைப் போட்டு தனது பாடசாலைக்கேயுரித்தான யூனிபோம் சாரியைச் சுற்றிக் கொண்டாள். பிள்ளைகளை தேடியவள், ஒருவன் இன்னும் பாத்ரூமை விட்டு வெளியே வராததை அவதானித்தாள்...

'பட பட' வென்று கதவைத் திறந்த போது தான் அவன் இன்னும் 'ருத்பிறசைத்' தேடிக்கொண்டிருப்பதைக் கண்டாள்... ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

நேற்று எங்கேடா அதை வைத்தாய்... பலத்துக் கத்தினாள்...

தினமும் இவன் ஏழரைக்கு முன் புறப்படமாட்டான்... ஏதாவது சாட்டு.. எதையாவது தேடுதல்.. மகளைத் தேடினாள்... அவள் கட்டிலினடியில் சப்பாத்தைத் தேடிக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு முதுகில் ஓங்கி ஒன்று வைத்த பின் வாசலினருகில் இருந்த சப்பாத்தை எடுத்துக் கொடுத்தாள்.

அந்த வீட்டில் உள்ள எவருமே அவளின் துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புவதில்லை.. என்றாலும்.. அன்று பொறுமையிழந்து விட்டாள்... 'என்ன ஒப்பீஷர் வேலைக்குப் போகவில்லையா

'ஆ. மாலதி உனக்குத் தெரியாதே. இண்டைக்கு சிறிலங்காவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் ''பைனல் மெச்'' நேற்று லீவு லெட்டர் கொடுத்திட்டன்.

'அப்படியெண்டா... இந்தப் பிள்ளையளைக் கொஞ்சம் கவனிக்கலாம்தானே எனக்கு மட்டுமா தலைவிதி'

'டேய்' உன்னால ஏலாட்டி அதுகள விட்டிட்டுப்போ ஏன் உன்ர அப்பா என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

செய்கிறாராம்... கதிரைக்குப் பாரமா சாய்ந்திருக்கிறாரே அவரிடம் சொல்லன்' எண்பத்திரெண்டைக் கடந்த நிலையில் போனவருடம் தன்னோடு அறுபது வருடங்கள் அன்புப் பயணம் செய்த துணையை இழந்த சோகம் மாறாமல். அந்த வேதனையிலேயே உடல் தளர்ந்த அப்பாவைத்தான் இவர் சுட்டிக் காட்டுகிறார். அவளால் தாங்க முடியவில்லை.

'இஞ்ச அந்த மனிசனைப் பற்றி ஒண்டும் கதையாதேயுங்கோ.. பாவம் மனிசன்... தன்ர பென்சன் காசில பிடிச்ச சீட்டுக் காசில வாங்கின ரீவியத்தான் நீங்கள் கட்டிப் பிடிச்சு அழுறியள்..

'என்னடி சொன்னனீ..' கோபத்துடன் எழுந்தவன் ஒருவாறு தன்னை அடக்கிக் கொண்டு அமர்ந்துவிட்டான். இரு பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு பாடசாலைக்குப் போகுப்போது எட்டுப் பதினைந்தாகிவிட்டது.

நேரப் பதிவுப் புத்தகத்தைநோக்கியவளின் முகம் சுருங்கிவிட்டது. சிவப்புக் கோடு... எட்டு மணிக்கே போட்டாகிவிட்டது.

'என்ன பிள்ள பிந்திப் போச்சோ... இப்பதானே விட்டவர்...' திரும்பினாள்.. ஏதோ 'ஜோக்' அடித்துவிட்ட நினைப்பில் அதிபர் பல்லிளித்துக்கொண்டு நின்றார்.. ஏதோ எட்டுமணிக்கு சிவப்புக் கோடிட்டுவிட்டு நிர்வாகத்தைச் சரியாகச் செய்கின்றேன் என்ற நினைப்பில்.. ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது.

பெரிய மனுசன்... கோபத்தைத் தனக்குள் அடக்கிக் கொண்டாள்.. 'சே...என்ன வக்கிரம் பிடித்த மனிதர்கள்' 'சேர் வீட்டில அம்மாவுக்கு சுகமில்ல.. அதனால ... ... 'சரி சரி எட்டு பத்து போட்டு சைன் பண்ணும்..' உங்கட வகுப்பில ஒரே சத்தம் கெதியாப்போய்ப் பாரும்...' வகுப்பைநோக்கி நடந்தாள்... மூன்றாம் மாடியில் இருந்தது அவள் வகுப்பு.. ஏறி முடிக்கவே மேல்மூச்சு... கீழ்மூச்சு வாங்கியது.. வகுப்பை எட்டிப்பார்த்ததுமே திகைத்து நின்று விட்டாள்.

மேசைக்கு மேலே இருவர் கட்டிப்புரண்டு கொண்டிருந்தனர்... வகுப்பே சுவாரஷ்யமாக சுற்றிவர நின்று உற்சாகப் படுத்திக்கொண்டிருந்தது. ஏற்கனவே இருந்த மன உளைச்சல்களின் வேகம் உந்த வந்த ஆத்திரத்தைத் தாங்கமுடியாமல் பிரம்பை எடுத்து எல்லோருக்குமே வரிகளை எண்ணினாள்... கை வலித்தது.. வகுப்பு அமைதியிலாழ்ந்தது.. 'சரி கொப்பியை எடுங்கோ... நேற்று செய்த கணக்கை பார்ப்போம் ஹோம் வேர்க் செய்த நீங்களோ..' என்றவளின் கண்கள் ஒருதடவை வகுப்பைச் சுற்றி வந்தது.. ஒரு கதிரை காலியாக இருந்தது.. மேசையில் புத்தகப்பை.. 'யாருடைய பேக் இது' 'ரமணன்ர' 'ரீச்சர்...' 'எங்க அவன்' 'காண்ல்ல ரீச்சர்...' காண்ல்லயோ.. எங்கடா போனான்.. சேகர் நீ போய் வெளியே பார்' அவள் மனதில் பல்வேறு கேள்விகள் அலைமோதின.

பாடசாலையிலிருந்தே போராட ஓடுகின்ற காலம் இது... கடவுளே... என்ன சோதனையப்பா! இண்டைக்கு ஒருவன்போனாலே ஆமிக்கும் பொலிசுக்கும் பதில் சொல்லி மாளாது... அதுவும் வகுப்பாசிரியர் நான்... அதிபர் என் தலையில் பழியைப் போட்டுவிட்டு நைஸாகத் தப்பிவிடுவார். ஆண்டவரே அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாது. யேசுவே...' மனதுக்குள் ஜெபித்துக் கொண்டாள்.

'எங்கேயும் காணல்ல ரீச்சர்' என்று சேகர் திரும்பி வரவும், புயல் வேகத்தில் ரமணனின் தாய் வகுப்புக்குள் நுழையவும் சரியாக இருந்தது. 'என்ன ரீச்சர்... என்ர பிள்ளைக்கு இப்படிப்போட்டு முதுகில் அடிச்சிருக்கிறியள்... பிள்ளையளுக்கு முதுகில் அடிக்கச் சட்டம் இருக்கோ... என் ஒரே ஒரு பிள்ளைக்கு நாங்க கையாலகூடத் தொட்டதில்லை... அவனுக்கு இப்படிப்போட்டு பிரம்பால அடிச்சிருக்கிறியளோ இந்தா பாருங்கோ...' ரமணனின் சேட்டை உயர்த்தி முதுகைக் காட்டினாள்... பிரம்பு பதிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடம் இருக்கத்தான் செய்தது .. அதற்காகவே தாயிடம் மன்னிப்பு என்ற பாவனையில் சமாளித்து அனுப்புவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

அவளால் என்ன செய்யவதென்றே தீர்மானிக்க முடியவில்லை. வகுப்பை கட்டுப்படுத்த வேண்டும் .. பாடத்திட்டம் முடிக்கவேண்டும் .. அதுமட்டுமா... புதிய கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் மதிப்பீடு ... கணிப்பீடு ... சிவப்பு... கறுப்பு... மஞ்சள்... பச்சை நிறப் புள்ளியிடல் திட்டம்... அலகுப் பரீட்சை மாதப்பரீட்சை... தவணைப் பரீட்சை... அம்மாடி ..

வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு ஆசிரியர் என்றாலே நல்ல சம்பளம் லீவு என்றெல்லாம் கூறி சொகுசான உத்தியோகமாகத்தான் தெரியும்... ஆனால் .. ஆனால் உண்மையில் புழுவின் வதைபோல் படும் வேதனைகள்... மனக்கஷ்ரங்கள்... வெதும்பல்கள் யாருக்குப் புரியும்... புரிய வைக்கத்தான்முடியுமா?

பாடசாலை விடும் மணி அடித்ததும் .. அதுவரை ஒய்ந்திருந்த மாணவர்கள் கட.... புட.... என்று கதிரையை அடுக்கும் சத்தம் கேட்டது அதிபர் சடுரமாக ஓங்கிக் கத்தினார் .. யாரந்த வகுப்புச் ரீச்சர் ? இப்படி கதிரை மேசைகளை உடைக்க கதைத்துக்கொண்டிருப்பது .. கூனிக் குறுகிப் போனாள்...

மாணவர் மத்தியில் ... மாணவர் விட்ட பிழைக்காக பிழைகளைத் தாங்கி அவளைச் சிலுவையில் அறைந்தாற்போன்ற உணர்வு... இப்படித்தானே... இறைமகன் யேசு பாவிகளின் பாவங்களுக்காக தானே பாவங்களைச் சுமந்து சிலுவையில் மரித்தார்

ஒரு கணம் .. இதை நினைத்தவள்... தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். இவைகளை மென்று விழுங்குவதுதான் ஆசிரிய வாழ்வு... பக்கத்து வகுப்பு ரீச்சர் தயாவுடன் சேர்ந்து வீதியால் நடந்து கொண்டிருந்தபோதுதான் அந்த விபரீதம் நடந்தது ..

ரமணனின் தந்தை .. ரமணனை ஒரு கையால் பிடித்தபடியும் .. மறு கையில் சாராயப் போத்தலைப் பிடித்தபடியும் சந்தியில் நின்று சந்நதமாடிக் கொண்டிருந்தார். விக்கித்துப் போனாள். மெல்ல ஒதுங்க நினைத்தவளை ரமணனின் தந்தைகண்டு கொண்டார். தள்ளாடியபடியே அவளை நெருங்கினார் மதுவாடை 'குப்' என அவள் மூக்கில் அடித்தது.

'டீச்சர் .. டீச்சர்... இவன் ஆறெண்டு தெரியுமோ இவன் ஆறெண்டு தெரியுமோ என்ர பிள்ள... என்ர பிள்ள .. நான் என்னத்துக்கு இவனப் படிப்பிக்கிறன் தெரியுமோ... விஞ்ஞானி ஓமோம் விஞ்ஞானி... விஞ்ஞானிக்கு அடிக்கலாமோ எந்தச் சட்டத்தில் எழுதியிருக்கு விடமாட்டன் இதை விடமாட்டன் .. சந்தியில் சனம் கூடிவிட்டது.

யேசுவை சாட்டையால் அடித்தனர்... என்பதைப் பைபிளில் பல தடவை படித்திருக்கிறாள்... இப்போதுதான் அதன் அர்த்தம் அனுபவ பூர்வமாக விளங்குகிறது. சாட்டையால் அடித்தால் நோகும்... இங்கோ அவளைச் சொல் சாட்டையால் சந்தியில் வைத்து அடிக்கின்றனரே அவளின் அடிமனது விம்மி வெதும்பி வெடித்தது... நல்ல வேளை கடைமுதலாளி வந்து சமாதானப்படுத்தி அழைத்துச்சென்றார்... இல்லா விட்டால்... சந்தியில் அவளின் கௌரவம் மானம்... கல்வி எல்லாமே துகிலுரியப் பட்டிருக்கும்...

வியர்க்க வியர்க்க வீடு நோக்கி ஓட்டமும் நடையுமாக ஓடினாள் ஓடிச்சென்று கட்டிலில் படுத்து ஓலமிட்டு அழவேண்டும் போலிருந்தது இரு பிள்ளைகளும் சண்டை பிடித்து ஓடி அடிபட்டுக் கொண்டிருந்தனர்... அவளின் அப்பா இவர்களின் சண்டையைச் சமாதானப்படுத்த முயன்று அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்தவரை அவரின் மைத்துணி தூக்க முயன்று கொண்டிருந்தாள். ஆனால்... ஆனால் .. அவளின் கணவன்... இந்த உலகையே மறந்து... வீட்டின் சூழலை மறந்து... தனக்கு ஒரு குடும்பம் இருக்கிறதே என்ற நினைவே கிஞ்சிற்றும் இல்லாமல் கிறிக்கற் மெச்சே கதியாய் தனை மறந்து பார்த்துக் கொண்டிந்தவனை

(25ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹினிதும - 50 ஆண்டுகள்

இலங்கையில் புகழ்பெற்ற தவக்கால யாத்திரைத்தலமாக விளங்கும் ஹினிதும கல்வாரிச் சேத்திரம் உருவான ஐம்பது ஆண்டுகள் நிறைவை இவ்வாண்டு பக்தர்கள் கொண்டாடுகின்றனர்.

காலி மாவட்டத்தில் உள்ள ஹினிதும கிராமத்தில் கிங்கங்கைக் கரையோரத்தில் புனித அன்னம்மாள் ஆலயத்தை அண்மித்ததாக உள்ள இத்திருத்தலத்தை 1949ம் ஆண்டு அருள்திரு சிறில் எதிரிசிங்க அடிகளார் ஆரம்பித்துவைத்தார். இயேசுவின் திருப்பாடுகளைக்கூறும் ஐம்பதுக்கும் மேலான உருவச் சிலைகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் இயேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளைத் தியானிக்கும் தவக்காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் இனமத பேதமின்றி இங்கு கூடி தமது வேண்டுதல்களைச் செலுத்தி, ஆராதிக்கின்றனர். பக்தி பூர்வமாக அனைவரும் ஒன்றுகூடி சிலுவைப்பாதை செய்வதும், வழிபாடுகளில் கலந்துகொள்வதும் கண்கொள்ளா நிகழ்வாகும்.

இனமுரண்பாடுகளும், பகையும், பிரிவும், போகும் நிலவும் இந்நாட்டில் ஹினிதும யாத்திரைத்தலம் அனைவரும் ஆன்மீக உணர்வுடன் ஒன்றுகூடி ஒருவரை ஒருவர் அறிந்து, புரிந்து, உதவி, தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் ஓர் இடமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். தென்மாகாணத்தில் சிங்கள மக்களைப் பெரும்பாலும் கொண்ட பிரதேசத்தில் இத்திருத்தலம் அமைந்திருப்பினும், இங்குவரும் தமிழ் மக்களின் நன்மை கருதி நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழிலும் வழிபாடுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன என்பது முக்கியமானதாகும். காலம் சென்ற யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு எமிலியானிஸ்பிள்ளை அவர்கள் இதற்குப் பெரிதும் காரணமாக இருந்தார்.



கடந்த ஐம்பது ஆண்டுகளாக பலவகையிலும் வளர்ச்சி கண்டுவந்துள்ள ஹினிதும கல்வாரித் திருத்தலம் பக்தர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும், புதுப்பித்தலுக்கும், அமைதிக்கும், ஒற்றுமைக்கும் அருளும், வலிவும்தந்து விசுவாச வேர்களை ஆழப்பதிக்கும் அற்புதத் தலமாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இன்டர்நெட்டில்’ ஈழத் தமிழ்

**ஆர். சிவலிங்கம் (உதயணன்)**
ஹெல்சிங்கி பல்கலைக் கழகம், பின்லாந்து.

உலகம் ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டே போகிறது. அதிலும் இன்டர் நெட்டின் வருகையால் இந்த மாற்றம் வேக மடைந்திருக்கிறது.

இந்த இன்டர்நெட் பல நல்ல வழிகளில் பயன்படுத்தப்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது நாளாந்தம் செய்திகள், கருத்துக்கள், மின் அஞ்சல்கள் (E-Mails) பரிமாறப்படுகின்றன. பூகோளத்தின் மறுபக்கத்தில் இருக்கும் ஒரு வருக்கு ஒரு மின் அஞ்சலை அனுப்பிய சில நிமிடங்களிலேயே பதிலையும்பெற முடிகிறது.

அத்துடன் பயனுள்ள பல ஆவணங்களும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த வாய்ப்பும் வசதியும் தமிழ் இலக்கியத்திற்கு எந்த அள வில் பயன்படுகிறது என்று பார்க்கலாம். சுவிற்சலாந்தில் டாக்டர் கல்யாணசுந்தரம் அவர்கள் செய்துவரும் பணியே மிகச்சிறந்த தாகத் தெரிகிறது.

அவர் இதை ஒரு பொழுது போக்குப் பணியாகத் தொடங்கித் தொடர்ந்து செய்து வருவதாகக் கூறுகிறார். தமிழ் இலக்கிய உல கம் அவரை என்றும் நினைவில் வைத்திருக் கும் வகையில் இரவு பகலாகச் சிரமப்பட்டு இதனை நிறைவேற்றி வருகிறார்.

திரு. கல்யாணசுந்தரம் தாமே ‘மயிலை’ என்ற தமிழ் எழுத்துக்களை உருவாக்கி அந்த எழுத்துக்களில் பழைய தமிழ் நூல் களைப் பதிந்து பாதுகாத்து வருகிறார். அவ ரிடம் இலவசமாகப் பெறக்கூடிய அவருடைய ‘மயிலை’ எழுத்துக்களைப் பயன்படுத்தி, அவருடைய ‘தமிழ் மின் நூலக’த்தில் இந்த நூல்களைத் தமிழிலேயே கணனித் திரையில் படிக்கலாம். அச்சுப் பிரதிகளையும் எடுத்துக் கொள்ளலாம். இன்டர்நெட் வசதியுள்ளவர் கள் அவருடைய தமிழ் மின் நூலகம் பற்றிய விபரங்களையும், இதுவரை பதிவான நூல் களின் பட்டியலையும் அவற்றுள் விரும்பிய ஏதாவது நூலை முழுமையாகவும் பார்க்க லாம். திரு. கல்யாணசுந்தரம், இதுவரை பதிவுசெய்த நூல்களில் பெரும்பாலானவற் றைப் பக்தி இலக்கிய நூல்கள் என்றே சொல்லலாம். திவ்விய பிரபந்தம் 3 பாகங் கள், திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா, திருவாசகம் என்று பட்டியல் நீண்டுகொண் டேபோகிறது. அவருடைய நற்பணியும் தொடர்ந்துகொண்டே போகிறது.

சங்க இலக்கியம் என்று பார்க்கப்போ னால், Gopher Menu என்ற கோவையில் சிலப்பதிகாரம் போன்ற பல நூல்கள் இருக் கின்றன. அவை தமிழ் எழுத்துக்களில் அல் லாமல் ‘எழுத்துப் பெயர்ப்பு’ (Translitera- tion) என்ற முறையில் ஆங்கில எழுத்துக் களில் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த முறை தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு உகந்ததாகப் படவில்லை.

சங்க இலக்கியங்களைச் சிங்கப்பூர் நெட் டிலும் பதிந்திருக்கிறார்கள் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. அவற்றைப் படிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய தமிழ் எழுத்துக் களே தேவை. ஒவ்வொருவரும் வெவ்வேறு தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார் கள். மயிலை, ஆதவன், தமிழ்நெட், இணை மதி, அஞ்சல், முரசு என்று பல தமிழ் எழுத் துக்களில் தமிழ்ப் பக்கங்கள் இன்டர்நெட்டில் இருக்கின்றன. இந்த வரிசையில் கடைசியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாழ்ப்பாணம்' என்ற எழுத்துக்களை வீர கேசரி' பயன்படுத்துகிறது. எல்லோரும் இந்த எல்லா எழுத்துக்களையும் வைத்திருந்து இந்தப் பக்கங்களைப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் பார்க்க, எல்லோரும் இணைந்து இரண்டொரு தமிழ் எழுத்துக்களில் எல்லாத் தமிழ்ப் பக்கங்களைக் கொண்டுவர இயலாதா?

மேலும், திருக்குறள், பட்டினத்தார், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் பாடல்களைச் சிலர் தங்கள் தனிப்பக்கங்களில் (home pages) பதிந்து வைத்திருக்கிறார்கள். சிலர் முழுமையான பாடல்களையும், சிலர் தெரிவுசெய்த சில பாடல்களையும் பதிந்து வைத்திருக்கிறார்கள். இவற்றுள் திரு. சித்தார்த்தன் இராமச்சந்திரமூர்த்தியின் திருக்குறளைக் குறிப்பிடலாம். இவர் திருக்குறள் முழுவதையும் 'கிராபிக்' முறையில் பதிந்திருப்பதால், விசேட தமிழ் எழுத்துக்கள் இல்லாமலே கணனித் திரையில் பளிச்சென்று தெரிகிறது.

தமிழ்நாட்டில் வெளியான நாவல்களின் பட்டியல், பழமொழிகள் போன்ற சில சிறிய கோவைகளையும் இன்டர்நெட்டில் காணலாம்.

இந்தியவியலில் ஆர்வமுள்ள தமிழரும், தமிழர் அல்லாத மேல்நாட்டு அறிஞரும் கலந்து ஆற்றும் பணி மிகப்பெரியது. இந்தியவியல் என்ற கருத்தரங்கில் நாளாந்தம் 5-10 கருத்துக்கள் ஆங்கிலத்தில் பரிமாறப்படுகின்றன. சமீபத்தில் யாழ்ப்பாணத்துத் தமிழ் பற்றி நடந்த கருத்துப் பரிமாற்றல்கள் சுவையாகவும் சிந்தனைக்குரியனவாகவும் இருந்தன. இந்தக் கருத்துக் கடிதங்கள் யாவும் இன்டர்நெட்டில் பதிந்து பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை எவரும் எப்பொழுதும் படிக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படியே வெவ்வேறு குழுக்களும் இன்டர்நெட்டில் தனிப் பக்கங்களைத் தொடங்கிக் கலந்துரையாடல்களை நடத்துகின்றன.

தமிழ் இணையம் என்னும் தமிழ் நெட்டில் வரும் தமிழ் மொழி, இலக்கியம், கலாசாரம் போன்றவற்றின் கருத்துப் பரிமாறல்கள் கவனத்தைக் கவர்கின்றன. நாமறிந்த இன்டர்நெட் சேவைகளில், தமிழ்நெட் முன்னணியில் நிற்பதும், தனக்கென ஒரு தனிப் பாதை அமைத்துக்கொண்டு துரிதமாக உலகத் தமிழ் உள்ளங்களை அணைத்துப் பிடிப்பதும் துல்லியமாகத் தெரிகின்றது. இந்தச் சேவையை நிறுவிய அரிய நண்பர்கள் பாலா பிள்ளைக்கும் முத்து நெடுமாறனுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இன்டர்நெட் மூலம் இன்னொரு சிறப்பான சேவை பற்றியும் அறிய முடிந்தது. நோர்வேயில் திரு. இரா. கனகரெத்தினமும் அவரது துணைவியாரும் 'உலகத் தமிழர் ஆவணக் காப்பக'த்தை நடத்தி வருகிறார்கள். ஈழத்தமிழர், உலகத்தமிழர் தொடர்பான கலை, கலாசாரம், இலக்கியம், கட்டுடக்கலை ஆகியன சம்பந்தப்பட்ட 7,000 பத்திரிகைச் செய்திகள் கருத்துக்களைச் சேகரித்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இன்டர்நெட்டுக்கு முந்திய காலமான 1956ல் இவர்கள் இப்பணியைத் தொடங்கியதால் தங்கள் சேகரிப்புகளைப் புகைப்படப் பிரதிகளாகவும் மைக்ரோ பிலிம்களாகவும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இப்படியே பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருக்கும் கல்வி நிலையங்கள், நூலகங்கள், காப்பகங்களிலும் தமிழ் நூல்கள் சுவடிகளாகவும், புகைப்படப் பிரதிகளாகவும், மைக்ரோ பிலிம்களாகவும் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் இன்டர்நெட்டில் பதிந்து பாதுகாக்கப்படும் தமிழ் நூல்களைப்பற்றி மட்டுமே இங்கு எடுத்துக் கொள்ளுவோம்.

ஈழத்துப் படைப்புகள் எந்த வடிவிலாவது இன்டர்நெட்டில் இருக்கிறதா என்று தேடிப்போன இடத்தில்தான் இவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களையும் பெற முடிந்தது. ஆனால் ஈழத்துத் தமிழை எங்கேயும் காண முடிய வில்லை. 'தமிழ்' என்ற பொதுநோக்கில் உலகமெலாம் வாழும் தமிழரும் தமிழார்வம் உள்ள பிறநாட்டு அறிஞரும் செயற்பட்டு வருகிறார்கள். அந்தச் சமுத்திரத்தில் ஈழத் துப் படைப்புகள் போய்விடுகின்றன.

யாழ்ப்பாண நூலகம் எரிந்ததே தாங்க முடியாத பெரிய இழப்பு. அதைத்தொடர்ந்து இன்று வரைக்கும் ஈழத்துத் தமிழ் மக்கள் உயிருக்காக ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் ஈழத்து இலக்கியம் எந்த அள வுக்கு எவ்வளவு காலத்திற்கு பாதுகாப்பாக இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே இருக் கிறது.

இதுபற்றி ஹெல்சிங்கிப் பல்கலைக்கழ கத்தில் (ஹெ. ப. க.) நாங்கள் சிலர் ஆலோ சித்தோம். இன்டர்நெட்டில் ஹெ. ப. வின் தனிப்பக்கங்களில் 'ஈழத்துத் தமிழ் மின் நூலகம்' என்ற ஒரு கோவையை ஆரம்பித்து, சிறந்த ஈழத்து நூல்களைப் பதிந்து பாது காக்கலாம் என்று எண்ணினோம். ஆனால் இந்தப் பாரிய பணியைச் செய்யக்கூடிய சூழ் நிலை இங்கு இல்லை. இந்த நாடு முழுவதி லும் சுமார் நூறு தமிழர்கள்தான் வாழ்கி றார்கள். இவர்களில் தமிழார்வம் உள்ளவர் களைக் காண்பது அரிதிலும் அரிது. இது ஒரு தனிநபர் சாதிக்கக்கூடிய பணியல்ல. தமிழர் ஆயிரக்கணக்காகப் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் குழுக்களாகச் சேர்ந்து செய்ய வேண்டிய மிகப் பெரிய பணி. மேலை நாடு களில் இருக்கும் தமிழ் இலக்கிய அமைப்புக் கள்தான் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

இந்தப் பணியின் முன்னோடியும் அநுப வம் மிக்கவருமான திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கு இதுபற்றி எழுதினோம். அவர், ''நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தச் சொற்ப காலத்திலேயே சில இலக்கியச் சுவ டுகள் அழிந்து போயிருக்கலாம். எனவே சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். செயல்பட் டுக்கொண்டிருங்கள்'' என்று எழுதினார்.


எனவே, இந்தப் பாரிய பணிக்கு ஒரு வழியும் வாயிலும் அமைத்துக் கொடுப்பது போல ''ஈழத்துத் தமிழ் நூலாசிரியர்களும் அவர்களது படைப்புகளும்'' என்ற நூலைத் தொகுக்க ஹெ. ப. க. முன்வந்திருக்கிறது. இந்தத் தொகுப்பு (1) 1900 வரை. (2) 1901 தொடக்கம் 1950 வரை. (3) 1951 தொடக் கம் 2000 வரை என மூன்று பாகங்களாக அமையும். ஒவ்வொரு பாகத்திலும் படைப் பாளிகள் படைப்புகளின் விபரங்களுடன் அகரவரிசையில் அறிமுகப்படுத்தப்படுவர். நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், ஆய்வு நூல்கள், அறிவு நூல்கள், சமய நூல்கள், மொழிபெயர்ப்பு, நூல்கள் ஆகியன இத் தொகுப்பில் இடம்பெறும். இந்தத் தகவல் கள் யாவும் இன்டர்நெட்டில் ஹெ.ப.க. வின் தனிப்பக்கங்களில் பதிந்து பாதுகாக்கப்படும். இவற்றை எவரும் எப்பொழுதும் இலகுவா கப் படிக்க வசதியாக இருக்கும். ஆனால் வெளியார் எவரும் திருத்தங்கள் செய்ய முடியாதபடிக்குப் பாதுகாப்பாகவும் இந்தப் பக்கங்கள் அமைக்கப்படும்.

இந்தத் தொகுப்புக்கு ஆசிரியராக ஆர். சிவலிங்கம் (உதயணன்) ஆகிய என்னை நிய மித்துள்ளனர். இணையாசிரியராக திரு. எஸ். திருச்செல்வம் பணியாற்றுகின்றார். கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான இவர் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர்.. (Thiru S. Thiruchelvam, Editor in Chief, Tamils' Information, P. O. Box 3, Station 'F', Toronto, Ontario, Canada. M4Y 2L4) துணையாசிரியர்களில் ஒருவராக நியுஸிலாந்தில் வசிக்கும் திரு. ரி. திருநந்த குமார் (Mr. T. Thirunanthakumar, 158, Pigeon Mountain Road, Bucklands Beach, Auckland, Newzela d) பணியாற்றுகின்றார். மேலும் இரண்டு துணையாசிரியர்கள் அவுஸ் திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளில் வசிப் பவர்களிலிருந்து நியமிக்கப்படுவார்கள்.

25ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந. பார்த்திபன்

## -39-

## இறுதி அங்கம்

கண்ணனுக்கு எல்லாம் புரியாத புதிராக இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கத்தி கட்டிக்கொண்டவர்களாகவே தெரிகிறது. சிலர் பல கத்திகளைக் கட்டிக் கொண்டவர்கள். ஜாதி-அந்தஸ்து - மொழி - பிரதேசம் - கல்வி .. சந்தர்ப்பத்தைப் பார்த்துக்கொண்டு ஆவலுடன் காத்திருக்கிறார்கள். கொஞ்சம் அசந்தாலும் ஒரே போடாய் போட்டு விடுவார்கள்.

எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன எல்லோருக்கும். பாங்கர் வேலைக்குப் போவது குறைந்துவிட்டது. முலாபர் வருமானத்தைப்பற்றி கவலைப்படவில்லை. மதம் ஓர் அபின். போதைவஸ்து. யாரோ சொன்னது சரிபோலப் படுகிறது. போதை தலைக்கேறி தாம் என்ன செய்கிறோம் எனத் தெரியாமல் நடக்கிறார்கள். மதங்கொண்ட யானைக்கு காலில் மிதிபடுவது எது என்று தெரியாமல் மிதித்து அழிப்பதுபோல்இவர்களுக்கும் எதுவும் புரியமாட்டேன் என்கிறது. மனிதம் என்பதே என் மதம் என்றோ எல்லா மதமும் சம்மதம் என்றோ நினைப்பதில் இவர்களுக்கு என்ன சங்கடம் இருக்கிறது?

மறம் ஒரு வழிதானே. அது ஒரு வழிப்பாதை . அல்லவே. எந்த வழியில் சென்றாலும் அடையும் இடம் ஒன்றுதானே. இந்த வழியில் தான் எல்லோரும் போக வேண்டுமொன்று சட்டமா என்ன? புதிய வழி கண்டுபிடித்து செல்பவர்களை ஏன் வெறுக்கவேண்டும்? புதிய வழிகள் கண்டுபிடிக்கப்பட்டதால்தானே இன்றுள்ள சமயங்கள் உருவானது. இதைப் புரியாது ஒவ்வொருவரும் போட்டிபோடுவது ஏனென்று கண்ணனுக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது.

மதவெறிப் போர்களும் இன்னுமொரு தொடர்கதை தானா ? எல்லாவற்றிற்கும் மேலாக மனிதம் மேலோங்கி இருக்கவேண்டும் என்பதை இவர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

தன் மனம் போனபோக்கில் நினைத்தபடி முலாபர் வீட்டை நோக்கி அவன் கால்கள் சரியான பாதையில் போகின்றன. அவனது அறிவுக்கெட்டியபடி, அனுபவத்திற்கேற்றபடி கால்கள் மட்டும் அல்ல சரியான பாதையில் போய்க்கொண்டிருக்கின்றன, மனமும்தான்.

அந்தோனி வீட்டில் அவன் பேசிக்கொண்டிருந்ததை வேவு பார்த்துக் கொண்ட இருவரும் இன்னும் சிலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலுக்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேவு பார்த்தவர்கள் ஏதோ சொல்லிக்கொள்கிறார்கள்.

''வின்சன் வாளெங்கை, கத்தி எங்கை என்று இப்பவே திரியிறான்'' எனக் கண்ணன் வின்சனின் பெற்றோர் கொஞ்சம் கலக்கத்துடன் சிந்தித்துப் பார்க்கட்டும் எனச் சொன்னதும், அதற்கு அந்தோனிமுத்து ''அவன் அடிவாங்கிக்கொண்டுதிரியட்டும் அவனில என்ன இருக்கிறது இன்னும் அடியைப் பொறுத்துக்கொண்டு இவன் இருப்பதற்கு என்றதோடு, அவனை விட்டிட்டு வரச்சொல்லு நான் அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கிறன்'' என்று சொன்னதும் மட்டுமே வேவு பார்க்க வந்தவர்களின் காதுகளில் அழுத்தமாக விழுந்திருந்தன.

''ஐயா, பாடம் படிப்பிக்கிறதில்லை வாழ்க்கை. வாழ்க்கை பேசப்படுவதற்கல்ல... வாழ்வதற்கு'' என்று கண்ணன் சொன்னவைகள் அவர்கள் காதுகளைச் சென்றடையவில்லை. கூலிப்படைகளாக அவர்கள் ஓடிச்சென்றுவிட்டனர்.

தங்கள் கடமையைச் சரிவரச் செய்த திருப்தியுடன், அந்தோனிமுத்துவின் வீடுவரை சென்று திரும்பிவந்த வெற்றிக்களிப்பில் அவர்கள் கண்ணனை அந்தோனிமுத்துவின் வீட்டில் கண்டதையும் அரைகுறையாய்க் கேட்டதையும் சொல்லி விசுவாசமான தொண்டர் ஆக்கிக் கொண்டனர்.

கூடிநின்று கதைத்துக் கொண்ட கும்பலுக்கு கண்ணன் வரவு நல்லதல்ல என்ற நினைப்பு ஒருகணம் பிறக்கிறது. விபத்துக்களெல்லாம் ஒரு கணப்பொழுத் தடுமாற்றங்கள் தானே.

''அங்கே பாருங்கடா பச்சையரிசிப் பொங்கல் திங்கிறவன் வாறான்டா... அவனுக்கு என்ன துணிச்சல்டா... ம்...வேவு பார்த்திட்டுப்போய் அந்த வேதக்கார நாயிட்டை எல்லாத்தையும் சொல்லப் போறான்டா''

''இவன்தான்ரா எல்லாத்துக்கும் காரணம். இவனுக்கு நல்லபாடம் படிப்பிச்சால் எல்லாம் சரிவரும்''

''இவங்களெல்லாம் வாத்திக்கூட்டந்தானே. படிப்பிக்கிறதிலதான் நிக்கிறாங்க... இவங்களுக்கு நாங்க படிச்சுக் குடுக்கணும் ... ம் ... முதல்ல இவனுக்கு படிச்சுக் குடுக்க வேணும் ...''.

தங்களுக்குள் உஷார்க் கதைகள் பேசப்பேச, நீயோ நானோ என உத்வேகம் கொண்டவர்களாய் கண்ணனை நோக்கி ஓடுகிறார்கள்.

எதிர்பார்ப்புக்கள் அதிகமானால் ஏமாற்றங்களும் அதிகமே. கண்ணனுக்கு என்ன செய்வது எனச் சிந்திக்க முடியவில்லை. வெறிக்கும்பல் வெள்ளம் அவனை மொய்த்துக்கொண்டது. மூழ்கிக் கொண்டான் கண்ணன்.

அந்தோனிமுத்து எப்போதும் தாக்கலாம் என எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் எப்ப, எப்படித் தாக்க வரினும் பதிலடி கொடுக்க வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் அதற்கான ஆயத்தங்களுடன் தயார் நிலையில் இருந்தவர்கள் கையில் அகப்பட்டவற்றுடன் மேலும் வந்து குவிந்துகொண்டார்கள். மதங்கொண்டவர்களுக்கு தூதன் யார்? துரோகி யாரென்று அறியும் அறிவு - பக்குவம் உண்டா? தர்ம அடி போட்டார்கள். தர்மம் அடிபட்டது.

அடிங்கடா, வெட்டுங்கடா, கொல்லுங்கடா என்ற வெறிகொண்டவர்களின் மனிதாபிமான இரைச்சலுக்குள் அந்த மனிதாபிமானியின் குரல் அடங்கிக்கொண்டது. தன் இறப்பின் மூலம் இழப்பின் மூலம் வின்சன்-ரலீனா இருவரதும் வாழ்க்கை நிம்மதியாக அமையட்டும் என நினைக்கின்ற மகாத்மாவாக கண்ணன் இல்லை. தன்னைக் கொல்வதன் மூலம் இந்த மதவெறியர்களின் மனம் மாறட்டும் என




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கின்ற தியாகியாகக் கண்ணன் இல்லை. அப்பா வித்தனமாக வந்து மாட்டிக் கொண்டேனே என நினைக் கவும் கண்ணன் அவ்விடத்தி லில்லை. அடித்து - வெட்டிச் சிதைந்த, இரத்தத்தில் தோய்ந்த உயிரற்ற உடல் மட்டும் அங்கு இருந்தது. உருத்தெரியாமல் மனிதம் சிதைந்திருந்தது. மதம் மட்டும் எங்கும் வியாபித்திருந்தது.

முற்றும்

நன்றி!

# ம(னி)தம் தந்தவர் இவர்



கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக 'ம(னி)தம்' தொடர்கதையை எழுதிவந்த ந. பார்த்திபன் அவர்கள் சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், பேச்சு என்று பல் துறை ஆற்றல்மிக்க எழுத்தாளர். தொண்டனில் இவரது பல சிறுகதைகள், கட்டுரைகள் ஏற்கனவே பிரசுரமாகி உள்ளன. சுற்றிவளைக்காமல் கதையை நேரடியாகவே நகர்த்திச் செல்லுகின்ற இவரது எழுத்துக்களில் மானுடநேயம் நிறைந்திருப்பதைக் காணலாம்.

வடபகுதியைச் சேர்ந்த இவர் தற்போது வசிப்பது கண்டியில். ஆசிரியப்பணி புரியும் பார்த்திபன் ஒரு முதுகலை (M. A.) பட்டதாரி.

இவரது சிறு கதைகளான 'நரித் துறவு' தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய போட்டியிலும் 'நம்பிக்கை நட்சத்திரம்' உலக ஆசிரியர்தின சிறுகதைப் போட்டியிலும் 'பாதை தவறிய' லிந்துல கலை இலக்கியப் பேரவை நடத்திய போட்டியிலும், 'பூட்டில்லாப் பூட்டு' திசை பத்திரிகை நடத்திய போட்டியிலும் பரிசுகளை வென்றுள்ளன. இதைவிட கவிதை, பேச்சுப் போட்டிகளிலும் பரிசு பெற்றுள்ள ந. பார்த்திபன் எழுதியுள்ள முதலாவது தொடர் கதை 'ம(னி)தம்' என்பது குறிப்பிடத்தக்கது. ஆசியநாடுகளில் மதத் தீவிரவாதம் முனைப்புப் பெற்றுவரும் இன்றைய சூழலில் தீவிர மதவாதம் எவ்வாறு மனிதத்தை ,மானுட விழுமியங்களை, அப்பாவி உயிர்களை கொடூரமாக நசித்து அழித்துவிடுகிறது என்பதை இத்தொடர்கதையினூடாக சுவைபடச் சொல்லியிருக்கிறார் எழுத்தாளர். சிறந்ததொரு தொடர்கதையை தொண்டன் வாசகர்களுக்கு வழங்கிய எழுத்தாளர் திரு. ந. பார்த்திபன் அவர்களைப் பாராட்டுவதோடு, அவர் இன்னும் பல அரிய படைப்புகளைத் தந்து சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம்.

★ மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'புலரும் பொழுது'

# விமர்சனத்துக்கு மறுப்பு

கடந்த பெப்ரவரித் தொண்டனில் வெளிவந்த 'புலரும்பொழுது' ஒலிநாடா பற்றிய விமாசனத்துக்கு மறுப்புத் தெரிவித்து எழுதியிருந்தார் ஒரு வாசகர். அந்த விமர்சனம் முழுமையானதல்ல என்றும் ஒருவரைத் 'தூக்கிவைத்துள்ளது' என்றும் குற்றஞ் சாட்டும் ரா. சிக்காந்தி 'புலரும் பொழுது' இசைநாடாவில் பாடியுள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் எழுதிய மறுப்புக் கடிதத்திலிருந்து தேவையான பகுதிகளை தொகுத்துத் தருகின்றோம்.

— இ. ஆ.

ஆசிரியருக்கு,

தங்களது வெளியீடான 'தொண்டன்' இதழை தொடர்ந்து வாசிக்கும் மக்களில் நானும் ஒருத்தி. எப்பொழுதும் பிளவு இன்றி பல நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தும் தங்களின் இதழில் மாசிமாதம் வெளிவந்த இதழில் ''புலரும்பொழுது'' ஒலிப்பேழை வெளியீடைப் பற்றிய விமர்சனம் ஒருபக்கச் சார்பையே காட்டுகின்றது.

இந்த ஆக்கத்தைப் படித்ததும் எனக்கு சொல்லமுடியாத கோபமும், கவலையும் வந்தது. சரி இனி விடயத்துக்கு வருகின்றேன் ஒலி நாடாவின் வெளியீட்டைப் பற்றிக் குறிப்பிட்ட அன்புமணி அவர்கள் ஓரிடத்தில் ''பேழையில் 13 பாடல்கள் உள்ளன. இவற்றில் ஒன்றைத்தவிர ஏனைய பாடல்கள் மலர் வேந்தனால் இயற்றப்பட்டவை'', என்று எழுதியுள்ளார். அப்படி என்றால் அந்த ஒரு பாடல் யாரால் இயற்றப்பட்டது. 'வாசுதேவன்' என்று ஏன் குறிப்பிடவில்லை? மற்றவர்களுடைய திறமையை வெளிப்படுத்துவதுதான் விமர்சனத்தின் நோக்கம் என்றால் கட்டாயமாக அதையும் குறிப்பிட்டே இருக்க வேண்டும். பாடல்களுக்கான இசை அமைப்பும் மலர் வேந்தன் என்றும் குறிப்பிட்டு இருந்தார். அப்படியானால் 'இளஞ்சூரியன்' என்ற பாடலை இசை அமைத்த ரமேஷ் போஜியாவின் பெயரை ஏன் சுட்டிக்காட்டவில்லை. இது மனவருத்தத்திற்குரிய விடயம் மட்டுமல்ல தொடர்ந்து கிடைக்கவிருக்கும் உதவிகளை நாங்கள் இழக்கவும் வழியமைப்பதாகவுள்ளது.

மேலும் இசை இயக்கம் S. நிமல்ராஜ் என்று குறிப்பிட்டிருக்கும் அன்புமணி அவர்கள் நிமல்ராஜ் அவர்களை வளர்த்துவிட்ட இசைக் குழுவான 'AMAOB' ஐயும் வெளி உலகிற்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

''இசை இயக்கம் செய்த இளைஞர்களின் குரு சங்கீத பூஷணம் ஜீவம் ஜோசப் என்பதை அறியும்போது வியப்பு ஏற்படவில்லை'' என்றும் எழுதியுள்ளார். இது உண்மைக்குப் புறம்பானதாகும். இசை இயக்கம் செய்த S. நிமல்ராஜும், ஜெயம் அருமைநாயகமும், ஜீவம் ஜோசப் அவர்களிடம் இசையயின்றவர்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களைப் பாடியவர்களின் பட்டியலில் எல்லோரையும் குறிப்பிட்டுவிட்டு போயும் போயும் குழுவினர்களின் பெயர்களைக்கூட அறிவித்துவிட்டு ஒலி நாடாவின் பெயரையே கொண்ட பாடலைப்பாடிய செல்வி ரா. சிக்காந்தியின் பெயரை மறந்துவிட்டார். அவரை மட்டுமல்ல ந. குகனின் பெயர்கூட எழுதப்படவில்லை.

மேலும் ஒலிப் பேழையின் ஒவ்வொரு அம்சத்திலும் மலர்வேந்தனின் கைவண்ணத்தைக் காணமுடிகிறது என்று குறிப்பிட்டு, கடைசியில் பதிவுசெய்த I. J. ராஜேந்திராவிற்குப் பாராட்டும் தெரிவித்துள்ளார். இது எங்ஙனம் முறையாகும்?

ஒரு பேழை தயாரிப்பில் ஏற்கனவே இசை இயக்கம், இசை அமைப்பு, பாடல் அமைப்பு என்று பாராட்டியாகிபிட்டது. பின்பு பாடலின் அம்சங்களில் நிச்சயமாக ஒலிப்பதிவாளரின் கைவண்ணந்தான் தெரியுமே தவிர ஏனையவர்கள் சற்று தூரமே அமைவார்கள். எப்பொழுதும் ஒலிப்பதிவு நன்றாக அமையாவிட்டால் ஒலி நாடாவிற்கு மவுசு ஏற்படுவதில்லை.

ஆகவே, இது ஒரு சரியான, முழுமையான விமர்சனமாக எனக்குத் தெரியவில்லை. இந்த விமர்சனம் தனி நபரின் ஆக்கத்திற்கான விமர்சனமே தவிர இது ஒரு குழுவின் கடின உழைப்பையும், திறமையையும் கண்டுகொள்ளவில்லை என்பதே எனது ஆதங்கமாகும்.

★ கரோலின் சிக்காந்தி

# முரண்படும் மனிதன்

என் மொத்த தேசமோ
ஒரு முரண்பாட்டின் கிடங்கு
அதற்குள் நானோ
ஓர் முரண்பட்ட மனிதன்
இங்கே அடிப்படை விலையை
அழித்து விற்பவன்தானே
வியாபாரி என்று
விளக்கம் பெறுகிறான்
கலைகளை காசுக்காக
அழித்து விற்பவன்தானே
கலைஞன் என்று
காப்பாற்றப்படுகிறான்
சொந்த மக்களை துன்பச் சிலுவையில்
தூக்கிக்கட்டி
ஆணி அறைந்துவிட்டு
அடியில் நின்று
விளக்கம் வைக்கிறான்
இந்த வெற்றி
ஜனநாயகத்தின் வெற்றி என்று
எது... அப்பா
இங்கே ஜனநாயகம்
தினம்... தினம்
மனப்பரீட்சைகளில் அகராதிகளை
கையில் வைத்துக்கொண்டே
அமைதி ஐக்கியம்
சமாதானத்திற்கு
யதார்த்தமான
அர்த்தம் புரியாமல்
அன்றாடம் வெட்கப்பட்டு
தோற்றுப்போகிறேன்.
இறைவா
உன்னைத்தவிர
இங்கு எனக்கு
எதுவுமே புரிவதே இல்லை
தேசத்தின் பார்வையில்
தினம்... தினம்
முரண்படும் மனிதன்
நான்.. அப்பா.

★ நிலாவெளி கைலைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்

## தொடர் - 31

★ அருள்தந்தை பி. ஜோசப்

### ஆர்மேனிய கிறிஸ்தவ சபையினர்

அன்று மாலை ஆர்மேனிய கிறிஸ்தவ சபையினர் செறிந்து வாழும் பகுதிக்குச் சென்றோம். அது எ சலேமிலேயே உள்ளது. ''யார் இந்த ஆர்மேனிய கிறிஸ்தவ சபையினர்'' என்று உங்கள் மனதில் எழும் சந்தேகத்தை முதலில் தெளிவாக்க விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் சோவித் குடியரசின் ஒரு பகுதியாக இருந்த ஆர்மேனியா, சின்ன ஆசியாவில் கஸ்பியன் கடலுக்கு கிழக்கேயும் மெசப்பொத்தேமியாவுக்கு வடக்கேயும் அமைந்துள்ளது. அதேவேளையில் அதேவேளையில் அப்பிரதேசத்தில் முதன்முதல் கிறிஸ்தவத்தை தழுவிய நாடு என்ற பெருமையையும் பெறுகிறது. ஒரு மரபு வழிக்கதையின் படி அப்போஸ்தலர்களான ததேயு, பார்த்தலோமேயு என்பவர்கள் அங்கு முதன் முதல் நற்செய்தி அறிவித்ததாகக் கூறப்பட்டாலும், வரலாற்றுக் குறிப்பின்படி அங்கு கிறிஸ்தவ மதம் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் அதாவது கி. பி. 274 அளவில் புனித கிரகோரியாரினால் புகுத்தப்பட்டது என சான்றுகள் உள்ளன.

ஆர்மேனிய திருச்சபை முதன் முதலில் செசாரியா திருச்சபையின் கீழ் இருந்தாலும் கி. பி. 374ல் பிரிவு ஏற்பட்டது. 5ம் நூற்றாண்டில் விவிலியமும் வழிபாடும் ஆர்மேனிய மொழிக்கு மாற்றப்பட்டு படிப்படியாக கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்துசென்றனர். பிரிவுக்கு அடிப்படைக்காரணம் மொனோபிசைத்தார் (ஓரியல்பு வாதம்) என்ற பேதமாகும். அதாவது இவர்கள் கிறிஸ்துவில் இரண்டு இயல்புகள் (இறை இயல்பு, மனித இயல்பு) இல்லை எனவும், ஓரியல்பு மட்டும் உண்டு என்று வாதிட்டனர். அத்தோடு இணைந்து திரித்துவம், ஏழு அருட்சாதனங்கள் இவற்றிலும் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து முரண்படுகின்றனர். 1439ல் புளோறன்ஸ் பொதுச்சங்கத்தில் இவர்களை ஒன்றுசேர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் பலன் கிட்டவில்லை. அத்துடன் இவர்களுடைய குருக்களில் திருமணம் முடித்தவர்கள், முடிக்காதவர்கள் என இரு பிரிவினர் உண்டு. திருமணம் முடிக்காதவர்கள் குழுக்களாக வாழ்கின்றனர். அவர்களே ஆயர்களாகத் தெரிவு செய்யப்படும் தகுதிபெற்றவர்களாவர்.

ஆர்மேனிய கிறிஸ்தவ சபையினர் துருக்கியர், ரஷ்யர்கள் சோவியத் கம்யூனிஸ்ட் போன்றவர்களின் கலாபனைக்கு உட்படுத்தப்பட்டு பல இடங்களுக்கும் சிதறுண்டு சென்றனர். அவ்வாறு சிதறுண்டவர்கள்தான் புனித நாட்டிலும் குடியேறி எருசலேமில் தங்கள் திருச்சபையை நிறுவினர். தங்களுக்கென ஆலயங்களையும் பாடசாலைகள், குருமடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொண்டனர். கலாபனை காலத்தில் கிறிஸ்தவத்தைப் பாதுகாத்தவர்கள் அவர்கள்தான் என்றால் மிகையாகாது.

அவர்கள் அனைவரும் எருசலேமில் அன்று தொடக்கம் இன்றுவரை ஒரே பகுதியில் வாழ்கின்றனர். அதனால்தான் அப்பகுதியை ஆர்மேனியம் வாழும் பகுதி (Armenian Quarters) என இன்றும் அழைக்கின்றனர். அவர்களது ஆலயத்துக்குச் சென்றோம்.

24ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 36

1. ''ஆண்டவர் தந்தார், ஆண்டவர் எடுத்துக் கொண்டார்'' என்று கூறிய நீதிமான் யார்?

2. ''என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை'' யோவான் நற்செய்தியில் காணப்படும் இவ்வசனம் எத்தனையாம் அதிகாரம் எத்தனையாம் வசனமாக உள்ளது?

3. ''எருசலேம் திருச்சபையின் தலைவராக இருந்த யேசுவின் சீடர் யார்?

4. ''அண்மையில் பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்ற அமெர்த்தியா சென்'' எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

5. ''கெப்பிட்டல்'' என்ற புகழ் பெற்ற நூலை எழுதிய அறிஞர் யார்?

6. ''சார்க்'' ஒன்றியத்தை அங்கம் வசிக்கும் நாடுகளில் பெரிய நாடு எது?

பெயர் ..........

முகவரி ..........

.......... இங்கே வெட்டவும் ..........

## போட்டி விதிகள்

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 30-04-99

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 35,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 34 முடிவுகள்

**விடைகள்:**

1. இஸ்ராயேலர் 2. லூக்காஸ் 11:23 3. கொரிந்து சபையினருக்கு
4. உயர் நீதிமன்றம் 5. சுவிட்சர்லாந்து 6. 09 நாட்கள்

**பரிசு பெறுவோர்:**

முதலாம், இரண்டாம் பிரிவுகளில் எவரும் பரிசுக்குத தெரிவாகவில்லை.

ரூபா 50/- — செல்வி D. நந்தினி
பாணமைப்பற்று,
கோமாரி - 01.

ரூபா 25/- — G. B. மேர்சி ஜெயா
18, சங்கபோ மாவத்த,
பொறுபன வீதி,
இரத்மலானை.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.

22ம் பக்கத் தொடர்ச்சி .....

எருசலேமின் முதல் ஆயரான புனித யாகப்பர் வேதசாட்சியாக மரித்த இடத்தில்தான் அவ்வாலயத்தை அமைத்துள்ளனர். அவர்கள் வாழும் பகுதிதான் அன்னாஸ், கைப்பாஸ் இவர்களின் அரண்மனை இருந்ததாக இன்றும் நம்பப்படுகிறது.

அவர்களது ஆலயங்களில் சுரூப வணக்கங்கள் இல்லை. மாறாக புனிதச் செதுக்கு வண்ண ஓவியங்கள்தான் எல்லாச் சுவர்களிலும் நிறைந்திருந்தது. அவர்களின் மாலை வழிபாட்டில் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டோம். எல்லோரும் நிலத்தில்தான் உட்கார வேண்டும். ஆர்மேனிய மொழியிலே இறைபுகழ்ச்சியை செலுத்தினர். குருக்கள் தலைகளை முக்காடிட்டு மறைத்திருந்தனர்.

இவ்விதமாக, தங்களுக்கென உயர்பீடத்தையும், வேறுபட்ட வழிபாட்டு முறைகளையும், ஆன்மீகப் பாரம்பரியங்களையும் கொண்டிருந்த ஒரு கிறிஸ்தவ சபையினரை புனித பூமியில் சந்திக்க முடிந்த பேற்றினை அளித்த இறைவனுக்கும் அங்கிருந்தவர்களுக்கும் நன்றி கூறிவிட்டு எமது வதிவிடம் சென்றோம்.

(தொடரும்)

### வாழ்வுக்கு அல்ல சாவுக்கு
### நமது நாட்டில் 1999 - வரவு செலவு

| | | |
|---|---|---|
| கல்விக்காக | - | 15 மில்லியன் |
| இளைஞர் ஊக்குவிப்புக்காக | - | 10 மில்லியன் |
| ஆரோக்கியத்துக்காக | - | 09 மில்லியன் |
| ஆனால் | | |
| யுத்தத்துக்காக | - | 57 மில்லியன் |

நன்றி. ஒளியை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ம் பக்க தொடர்ச்சி

தகவல்களை நேரடியாக ஹெ. /ப. க. வுக்கோ, துணையாசிரியர்களுக்கோ அனுப்பி வைக்கும்படி இலக்கிய ஆர்வலர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம். விபரங்களை நூலாசிரியர்கள் தாங்களே அனுப்பலாம். நண்பர்கள், உறவினர்கள், ஆர்வலர்கள், தமிழ்/இலக்கிய எழுத்தாளர்/சமூகநல அமைப்புகளும் சேகரித்து அனுப்பலாம். (பாடசாலை நூல்கள், பயிற்சி நூல்கள் போன்றவற்றைத் தயவு செய்து தவிர்த்துக்கொள்ளுங்கள்)

இந்தத் தொகுப்புக்குத் தேவையான விபரங்கள் வருமாறு: (1) நூலாசிரியரின் பெயரும் புனைப்பெயர்களும் (2) பிறந்த திகதி (3) நிரந்தர முகவரி (4) தற்போதைய முகவரி (5) தொழில் (6) தனித்தனியே ஒவ்வொரு நூலின் தலைப்பு, பக்கங்களின் எண்ணிக்கை, உள்ளடக்கம் பற்றிய சிறு குறிப்பு, வெளிவந்த காலம், பதிப்பகத்தின் பெயரும், முகவரியும், முன்னுரை, சிறப்புரை எழுதிய அறிஞர்கள் பற்றிய விபரம் (7) நூலாசிரியரின் பாஸ்போர்ட் அளவு (மார்பளவு) புகைப்படம். (தகவல்களை முதலில் அனுப்பி விட்டுப் புகைப்படத்தைப் பின்னரும் அனுப்பலாம். புகைப்படத்தின் பின்புறத்தில் படத்தில் உள்ளவரின் பெயரைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள்) தகவல்களை ஹெ.ப.க. வுக்கு நேரடியாக அனுப்ப விரும்புபவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். R. Sivalingam ('Uthayanan'), Department of Asian and African Studies, P. O. Box 13, (Meritullinkatu 1), 00014 University of Helsinki Finland.

(நன்றி தமிழர் தகவல் பெப்ரவரி 98)

---

12ம் பக்கத் தொடர்ச்சி......

கண்டதும் காலைப் பொழுதில் இருந்து நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாய் ஞாபகத்துக்கு வர... வேதனையும் வெறுப்பும்... கோபமும்... ஆத்திரமும்... சலிப்பும் ஒருங்கே சேர்ந்து வார்த்தையாய் கொப்பளித்து வந்தது.

சீ... நீங்களும் ஒரு மனிதனா... இந்தக் குடும்பமும் நானும் கிடந்து போராடிக் கொண்டிருக்கையில் உங்களுக்கு ரீவியும் கிறிக்கெற்றும் ஒரு கேடா...... சே என்ன வாழ்க்கை .. உங்களை என்ர புருஷன் என்று சொல்லவே வெட்கமாக... வெறுப்பா இருக்கு ..... மனதின் வேதனைகளை கொட்டித் தீர்த்தாள்.. ஆனால்... ஆனால்... ஆண் வர்க்கத்தின் பிரதிபலிப்பு வேறு விதமாக இருந்தது... தனது சுவாரஷ்யத்தைக் கலைத்து தனது சுயரூபத்தை சுட்டிக் காட்டிய ஆத்திரத்தில் 'என்னடி சொன்னாய் ..' என்றுவந்து அறைந்துவிட்டான் பலமாக... ... ... மாலதி மயங்கி விழுந்தாள் .. இங்கு ஒரு மாலதிக்கு நடந்தது . ஆனால் சமூகத்தில் பல மாலதிகள் நடைப்பிணமாக நடமாடுகின்றனர் என்பதே நிஜம்.

... முற்றும் ..

Registered as a News Paper in Sri Lanka.




இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் மார்ச் – ஏப்ரல் 1999.

## புனித வார சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்: 28
நேரம்: காலை 11-15 மணி
★ புதிய உலகம் ★
குருத்து ஞாயிறு சிறப்பு மலர்

நாள்: 01
நேரம்: மாலை 5-30 மணி
★ புதிய உலகம் ★
புனித வியாழன் சிறப்பு மலர்

நாள்: 02
நேரம்: காலை 10-30 மணி
★ புதிய உலகம் ★
புனித வெள்ளி சிறப்பு மலர்

நாள்: 03
நேரம்: மாலை 7-00 மணி
★ புதிய உலகம் ★
புனித சனி சிறப்பு மலர்

நாள்: 04
நேரம்: காலை 10-45 மணி
★ புதிய உலகம் ★
உயிர்ப்பு விழா சிறப்பு மலர்

நாள்: 04
நேரம்: மாலை 7-00 மணி
★ புதிய உலகம் ★

நாள்: 06
நேரம்: மாலை 7-45 மணி
★ சிறுவர் உலகம் ★

நாள்: 10, 11, 12, 13
நேரம்: காலை 5-50 மணி
★ கத்தோலிக்க நற்சிந்தனை ★
வழங்குபவர்: அருள்தந்தை
நோயல் இம்மானுவல்

நாள்: 14, 15, 16
நேரம்: காலை 5-50 மணி
★ கத்தோலிக்க நற்சிந்தனை ★
வழங்குபவர்:
திருமதி P. J. அகுஸ்தீன்

நிகழ்ச்சித் தொகுப்பு:-
மலர்வேந்தன்
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு 265, திருமலை வீதி, வணசிங்கா பிரிண்டர்ஸில் அச்சிட்டு,
தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 1-4-99ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org